**சுருக்கம்**

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை – மானியக் கோரிக்கை 2019 – 2020 – மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்–தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அ1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 86

நாள்: 14.08.2019
விகாரி வருடம், ஆடி – 29
திருவள்ளுவர் ஆண்டு – 2050

படிக்க:–

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் கடிதம் எண். Rc.No. QC2/029849/19, நாள். 09.07.2019.

**ஆணை:-**

2019–2020ம் ஆண்டு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகளோடு கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> **“கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகள் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 24.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்”**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் உள்ள உணவு தானியங்களை சேதப்படுத்தும் பூச்சிகள் அட்டிகளில் இருந்து மாலை நேரம் வெளிவருவதனை புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகளில் உள்ள விளக்கு அதனை

ஈர்ப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயலும் என்றும், பூச்சிக்கொல்லி மருந்து கொள்முதல் செய்வதனை குறைத்து புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் மூலம் பூச்சிகளை கட்டுக்குள் கொண்டுவருவது அவசியமாகிறது எனவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளுக்கு 2840 புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் தேவைப்படும் நிலையில் 1100 புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் கையிருப்பில் உள்ளதாகவும், ஒவ்வொரு புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் ரூ. 4000/– வீதம் 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3 . மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கருத்துருவை ஆய்வு செய்து, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக ஒவ்வொரு புற ஊதாக் கதிர் விளக்குப் பொறி ரூ. 4000/– வீதம் 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
சென்னை–600 010.

**<u>நகல்:-</u>**
மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
நிதி (கூ.உ(ம)நு.பா) துறை,
சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்